# 1

# தேவனுடைய இராஜ்யம்

*"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் " (கொலோ. 1:13).*

"சமுத்திரமானது ஒரு யானை நீந்தக் கூடிய அளவு ஆழமானதாகவும், ஆனால் ஒரு சிறு குழந்தையானது அதன் கரையில் சிரமமாய் நடக்குமளவு ஆழமற்றதாகவும் உள்ளது'' என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். சமுத்திரமானது மாறுபட்ட பல பண்புகள் கொண்டதாகவே உள்ளது. அது கடற்கரையையும், ஆழமற்ற நீர்ப்பகுதிகளையும் கொண்டதாக உள்ளது, இருப்பினும் அது மாபெரும் ஆழங்களும், பரவலும், மிக விரிவான அகலமும் கொண்டதாகவும் உள்ளது.

அதுபோலவே, புதிய ஏற்பாட்டின் சபையும் பலவித அம்சங்களைக் கொண்டுள்ளது. பணிப் பொறுப்பில் அதன் ஒருமைப்பாட்டையும், கிறிஸ்துவுடன் நமது ஐக்கியத்தையும் நாம் உய்த்துணரும் பொழுது, நாம் சபையைக் கிறிஸ்துவின் சரீரமாகக் காண்கின்றோம் (ரோமர் 12:5). அவருடைய சபையார் என்ற வகையில் நாம் பெறும் கதகதப்பு, ஆதரவு மற்றும் தோழமை ஆகியவற்றை நாம் நினைக்கும் பொழுது, நாம் அதைத் தேவனுடைய குடும்பமாகக் கண்ணோக்குகின்றோம் (எபே. 2:19). அதை நாம் தேவனுடைய சட்டம் மற்றும் ஆளுகை என்ற கண்ணோக்கில் இருந்து சிந்திக்கையில், பூமியில் அதைத் தேவனுடைய இராஜ்யம் என்று உணர்கின்றோம் (மத். 16:16-18).

மாறுபட்ட இந்த விவரணங்கள் ஒன்று மற்றவற்றுடன் முரண்படுவதில்லை, ஆனால் நாம் சபை என்று (மொழிபெயர்ப்பில்) அழைக்கின்றதன் தெய்வீக உறுப்பினுடைய ஒன்றுபட்ட இயல்பை விவரிக்கும் வகையில் அவை ஒன்று கலந்தவைகளாகவே உள்ளன, புதிய ஏற்பாட்டின் சபையினுடைய மகிமை என்பது கிறிஸ்து சிலுவையின் மூலம் அளித்த திரளான பரிசுத்த பண்புகளை உள்ளடக்கம் கொண்டுள்ளது.

கேள்விக்கு அப்பாற்பட்ட வகையில், நாம் சபையை ஒரு இராஜ்யமாகக் கண்ணோக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகின்றார். பவுல் மனமாற்றம் பற்றி இருளின் அதிகாரத்தினின்று கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு மாறுதல் என்று கூறினார்: "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கித் தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதா ..." (கொலோ. 1:13). மனமாற்றம்

என்பது கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் என்று புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளதாலும் (எ.கா. ரோமர் 6:3; கலா. 3:27) மற்றும் கிறிஸ்துவின் சரீரம் என்பது சபை என்பதாகக் கூறப்பட்டுள்ள தாலும் (எபே. 1:21-23), இதைத் தொடர்ந்து, நாம் சபையை கிறிஸ்துவின் சரீரமாகவும், கிறிஸ்துவின் இராஜ்யமாகவும் (அல்லது தேவனுடைய இராஜ்யமாகவும்) அதே ஆவிக்குரிய உயிர்ப் பொருளாகவும் கண்ணோக்க வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகின்றார்.

"இராஜ்யம்" என்ற வார்த்தையானது வேதாகமத்தில் குறைந்தது ஆறு சந்தர்ப்பப் பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (1) இது பூமிக்குரிய உலகியல் சார்ந்த அரசாட்சியைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது (மத். 4:8). (2) இது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் "தேவனுடைய ஆளுகை" என்ற கருத்தைக் கொண்டுவரப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேலைத் தேவன் தம் தேர்ந்து கொண்ட தேசமாக முறைப்படி ஏற்படுத்திய பொழுது, அவர் அதைத் தம்முடைய இராஜ்யமாக அடையாளம் கண்டார் (யாத். 19:5, 6). (3) இது தேவனுடைய ஆட்சியுரிமை செலுத்துதல் அல்லது வல்லமை என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 12:28). தேவனுடைய சித்தம் எங்கெல்லாம் கீழ்ப்படியப் படுகின்றதோ அங்கெல்லாம் தேவனுடைய ஆளுகை நிலவுகின்றது. (4) இது பரலோகத்தில் தேவனுடைய ஆளுகையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. கிறிஸ்தவ நெறிகளில் வளரும்படி பேதுரு (கிறிஸ்தவர்களை) வலியுறுத்திய வேளையில் அவர் பரலோகத்தை நமது கர்த்தருடைய நித்திய இராஜ்யம் என்று குறிப்பிட்டார்: "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேது. 1:11). (5) இது சபைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. சபையென்பது தேவனுடைய பரலோக இராஜ்யத்தின் பூமிக்குரிய வெளிப்பாடாய் உள்ளது. ஆகையால், இது பரலோக இராஜ்யம் (மத். 16:18, 19), தேவனுடைய இராஜ்யம் (யோவா. 3:5), மற்றும் அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யம் (கொலோ. 1:13) என்று குறிப்பிடப் படுகின்றது. (6) இந்த வார்த்தையானது சாத்தானின் ஆளுகையைக் குறிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "சாத்தானின் ராஜ்யம்" (மத். 12:26) என்ற சொற்றொடரின் மூலம் அவனது வல்லமை தெரிவிக்கப்படுகின்றது.[1]

சபையை தேவனுடைய இராஜ்யம் என்பதாகச் சிந்திப்பது ஊக்க மூட்டுவதாகவும் மறைபொருள் உணர்த்துவதாகவும் உள்ளது. கர்த்தருடைய பூமிக்குரிய இராஜ்யமான சபையின் பண்புகளின் மீது நாம் குறிப்பாகக் கவனம் செலுத்துவோம்.

## ஆவிக்குரிய ஒரு இராஜ்யம்

அடிப்படையான இயல்பில் சபை என்பது சரீரப் பிரகாரமான தாகவோ அல்லது உலகப் பிரகாரமானதாகவோ இன்றி ஆவிக்குரிய ஒரு

இராஜ்யமாக உள்ளது. பிலாத்து இயேசுவை நோக்கி, “நீ யூதருடைய ராஜாவா?” என்று கேட்ட பொழுது (யோவா. 18:33) இயேசு, “என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரிய தல்ல” (யோவா. 18:36) என்று கூறியதன் மூலம் பதில் அளித்தார்.

இராஜ்யத்தின் ஆவிக்குரிய இந்த இயல்பானது சபையைப் பற்றிய இன்றியமையாத சத்தியங்களை அறிமுகப்படுத்துகின்றது. முதலாவது, சபையின் தலைமையகமானது பூமியில் அல்ல, பரலோகத்தில் உள்ளது. நமது மாண்புமிக்க அரசரான கிறிஸ்து பரலோகத்தில் தேவனுடைய வலது புறத்தில் அமர்ந்துள்ளார் (அப். 2:33). அவர் இராஜ்யத்தைப் பிதாவாகிய தேவனுக்குக் கடைசிக் காலத்தில் ஒப்புக் கொடுக்கும் வரை (1 கொரி. 15:24) தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் இராஜாவாக ஆளுகை செய்வார். இவ்விதமாக கிறிஸ்தவர்கள் என்போர் தங்களை இயேசுவின் கர்த்தத்துவத் திற்குக் கீழ்ப்படுத்தியதினால் தேவனுடைய ஆளுகைக்குள் நுழைந்துள்ள மக்களாய் இருக்கின்றனர் (பிலி. 2:9-11).

இரண்டாவது, கிறிஸ்தவர்களின் வாழ்வு, ஊழியம், மற்றும் ஆராதனை ஆகியவை சரீரப் பிரகாரமானவைகள் அல்ல, ஆவிக்குரியவற்றையே மையமாகக் கொண்டுள்ளது. நாம் ஆவிக்குரிய யுத்தம் செய்து (எபே. 6:12), தேவனுக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தி (1 பேது. 2:5), ஆவிக்குரிய உணவில் வாழ்ந்து (எபே. 5:12-14) மற்றும் பரலோகத்தில் குடியுரிமை யுள்ளவர்களாய் இவ்வுலகத்தைக் கடந்து செல்லும் பயணிகளாய் இவ்வுலகில் வாழ்கின்றோம் (பிலி. 3:20; 1 பேது. 2:11).

---

*தேவன் நமது இருதயங்களில் ஆளுமை*
*செலுத்தி ஆட்சி செய்கின்ற பொழுது*
*நாம் தேவனுடைய அரசின் உண்மையான*
*குடிமகன்களாய் இருக்கின்றோம்.*

---

மூன்றாவது, இந்த ஆவிக்குரிய இராஜ்யத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் இவ்வுலகத்தின் பொருள்களுக்குரிய உண்மைத் தன்மை களுடனான நமது உறவுகள் பரலோக ராஜ்யத்தின் நமது ஆவிக்குரிய குடியுரிமையினால் ஆளப்படுகின்றன. நாம் நித்தியத்தின் உருப்பெருக்கி மூலமாகக் கண்ணோக்குகையில் இந்த வாழ்வின் பகட்டுக்களினுடைய மதிப்பற்ற தன்மையைக் காண்கின்றோம்.

ஒரு கிறிஸ்தவருக்கும் பிசாசானவனுக்கும் இடையில் நடப்பதாக ஒரு கற்பனை உரையாடலை யாரோ ஒருவர் முன் மொழிந்துள்ளார். பிசாசானவன், “திருவாளர். கிறிஸ்தவர் அவர்களே, நான் உங்களுக்கு ஒவ்வொன்றையும் தருவேன். நான் உங்களுக்கு வீடுகளையும், நிலங்களை யும் பணத்தையும் தருவேன்” என்று கூறுகின்றான். திருவாளர். கிறிஸ்தவர்,

''நான் ஒவ்வொன்றையும் பெற்றுள்ளேன். எனது பிதாவானவர் உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் சொந்தமாகக் கொண்டுள்ளார். நீ எனக்கு ஏதொன்றையும் தர முடியாது, ஏனென்றால் நான் ஒவ்வொன்றையும் பெற்றுள்ளேன்'' என்று பதில் கூறுகின்றார். பிசாசானவன் மீண்டும் முயற்சி செய்கின்றான்: "நான் உங்களிடத்திலிருந்து ஒவ்வொன்றையும் எடுத்து விடுவேன். நான் உங்கள் வீட்டையும், உங்கள் மகிழ்ச்சியையும் மற்றும் உங்கள் பணத்தையும் எடுத்துக் கொள்வேன்." திருவாளர் கிறிஸ்தவர், "நீ ஏதொன்றையும் என்னிடத்திலிருந்து எடுத்து விட முடியாது. நான் ஏதொன்றையும் பெற்றிருக்கவில்லை. நான் பெற்றுள்ள யாவும் தேவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நான் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தைச் சேர்ந்தவனாக இருக்கின்றேன், எனவே எனது உண்மை யான மதிப்பீடுகள் இயல்பில் ஆவிக்குரியவைகளாயுள்ளன" என்று பதில் கூறுகின்றார். பிசாசானவன் இன்னொரு முறை முயற்சி செய்கின்றான்: ''நான் உம்மைக் கொன்று விடுவேன், நான் உம் உயிரை எடுத்துக் கொள்வேன்.'' திருவாளர் கிறிஸ்தவர், ''என்னைப் பொறுத்தமட்டில் கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்கின்றார். பிசாசானவன் கடைசி முயற்சியொன்றே மேற்கொள்ளுகின்றான்: "நான் உம்முடைய வாழ்வை இடுக்கண் நிறைந்ததாக்குவேன். பாவிகள் செய்கின்ற மகிழ்ச்சிக் குரியவைகள் யாவற்றையும் நீர் காண்பீர், உம்மால் அவைகளைச் செய்ய முடியாது போகும். நீர் மனநிறைவற்ற வகையில் வாழ்வீர்." திருவாளர் கிறிஸ்தவர், "இயேசுவின் சித்தத்தை நிறைவேற்றுவதே எனது மிக உயர்ந்த மகிழ்ச்சியாகும்'' என்று அறிவிக்கின்றார். தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் உறுப்பினராய் இருப்பது என்பது இந்த உலகையும் இதன் சோதனைகளையும் மாறுபட்ட வெளிச்சத்தில் நோக்கச் செய்கின்றது. இது நம்மை யோவானுடன் சேர்ந்து, "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவா. 2:17) என்று கூற உதவுகின்றது.

பரலோக ராஜ்யத்தின் குடிமக்களாய் இருப்பவர்கள், உலகத்தின் மக்களைப் போல இவ்வுலகத்தைக் கண்ணோக்குவதில்லை. இந்த உலகை மட்டும் சார்ந்தவர்களாயிருப்பவர்கள் தங்கள் உடமைகள், தங்கள் நிகழ்காலம் மற்றும் வருங்காலம் மற்றும் உலக விவகாரங்கள் ஆகியவை பற்றிக் கவலைப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் இருக்கின்றனர், ஆனால் நாம் இவ்வுலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. நாம் சரீரப் பிரகாரமான இராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாயிராமல், ஆவிக்குரிய ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்றோம். நமது பயபக்தியானது உலகப் பிரகாரமானதாக இன்றி, ஆவிக்குரியதாக உள்ளது. நாம் வியாதிப்பட்டவர்களுக்கு சேவை செய்து, பசித்தவர்களுக்கு உணவளித்து, உலகத்தை வாழ்வதற்குச் சிறந்த இடமாக்க உழைக்கின்ற பொழுது நமது உண்மையான அக்கறை நித்தியத்தைப் பற்றியதாகவே உள்ளது. நாம் சந்திக்கின்ற எல்லாரிடத்திலும் நாம் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் ஒவ்வொரு நபரின் ஆவிக்குரிய இரட்சிப்பையே மிக மேலாக வலியுறுத்து கின்றோம். நாம் உலகப் பிரகாரமான இலக்குகளுக்காக இன்றி ஆவிக்குரிய

இலக்குகளுக்காகவே வாழ்கின்றோம். இவ்வுலகத்தின் மனிதர்கள் புதிய உடைகளை விற்பார்கள்; கிறிஸ்தவர்களோ புதிய ஆத்துமாக்களைத் தேடுகின்றார்கள்.

## நீதியின் ஒரு இராஜ்யம்

இரண்டாவது, சபை என்பது நீதியின் இராஜ்யமாக உள்ளது. பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் தாங்கள் இந்த இராஜ்யத்தினுள் பிரவேசிப்பதற்கு முன்பு அவர்கள் வாழ்ந்தது போல வாழ்வதில்லை. இராஜ்யத்தின் பிள்ளைகள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கின்றனர் என்று பவுல் கூறினார்: "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்" (எபே. 5:8-10). மேலும் அவர், "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" (ரோமர் 14:17) என்று கூறினார்.

புதிய ஏற்பாடானது இரு வகை நீதியைப் பற்றிப் பேசுகின்றது. ஒன்று ஏவப்பட்ட எழுத்தாளர்களால் அடிக்கடி பேசப்படுகின்ற நீடித்து வழங்கப்படுகின்ற நீதியாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்களாகின்ற போது, இந்த நீதியானது நம்மேல் பொழியப்படுகின்றது, நாம் தேவனுக்கு முன்பாக நீதியாக்கப்படுகின்றோம். கிறிஸ்துவுக்கு மனம்மாறுவதில், நாம் ''அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்றோம்" (ரோமர் 3:24).

புதிய ஏற்பாடானது காட்சிப்படுத்தப்படும் நீதியொன்றையும் குறிப்பிடுகின்றது. கிறிஸ்தவர்கள் நீதியில் நடந்து அல்லது நீதியை வழக்கமாய் வெளிப்படுத்தி நடந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். யோவான், "... நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்'' என்று எழுதினார் (1 யோவா. 3:7). கிறிஸ்தவர்கள் பாவத்தில் "வாழ்தல்" அல்லது பாவத்தில் "நடத்தல்" என்பது நினைத்தும் பார்க்க முடியாததாக உள்ளது, யோவான், ''பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; … தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான் ..." (1 யோவா. 3:8, 9) என்று கூறினார். ஆகையால் தேவனுடைய இராஜ்யமானது நீதியின் இராஜ்யமாய் உள்ளது; அதற்குள் பிரவேசிப்பவர்களுக்கு நீதியானது நீட்டிக்கப் படுகின்றது, மற்றும் அதன் உண்மையான குடிமக்களாய் வாழ்பவர்களால் நீதியானது காட்சிப்படுத்தப்படுகின்றது.

இருதயத்தில் தேவனுடைய ஆளுகை மற்றும் ஆட்சி செய்தல் என்பது தன்னிலே வாழ்க்கையில் நீதியை வெளிப்படுத்துகின்றது. அமெரிக்காவில் 1930களில் ஏற்பட்ட மாபெரும் மந்த நிலையின் போது வாழ்ந்த ஒரு மனிதரைப் பற்றிய கதையொன்று சொல்லப்படுகின்றது. அவர் இந்த மந்த

நிலையினால் சற்றும் பாதிக்கப்படாதவராக, சபையின் உறுப்பினராக வாழ்ந்து வந்தார். மற்றவர்கள் ஏழ்மையினால் துன்புற்ற வேளையில் இவர் வசதியோடும் செல்வத்தோடும் வாழ்ந்தார். இருப்பினும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் காணிக்கைத் தட்டு அவரிடத்தில் கொண்டு வரப்பட்ட பொழுது அவர் ஒரு வெள்ளி நாணயத்தை மட்டுமே அதில் இடுவார். அந்த நாட்களில் சபையானது இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு மாபெரும் நிதித் தேவையுடையதாயிருந்தது, ஆனால் இவர் சீராக ஒரே ஒரு நாணயம் மட்டுமே இட்டு வந்தார். அவர் இராஜ்யத்தில் இருந்தாலும், இராஜ்யம் அவருக்குள் இல்லை என்பது உறுதியாகும்.

தேவன் நமது இருதயங்களில் ஆளுகை மற்றும் ஆட்சி செய்யும் பொழுதுதான் நாம் தேவனுடைய ராஜ்யத்தின் உண்மையான குடிமகன் களாய் இருக்கின்றோம். தேவனுடைய ராஜ்யம் என்பது நீதியின் இராஜ்யமாய் இருக்கின்றது. இந்த இராஜ்யத்தில் குடியுரிமை என்பது தேவனுடைய ராஜரீகத்தை உணருதலாகவும், நமது அன்றாட வாழ்வில் அவருடைய சித்தத்திற்கு (நம்மை) ஒப்புக் கொடுத்தலாகவும் அர்த்தப்படுகின்றது.

## நித்தியமான ஒரு இராஜ்யம்

மூன்றாவது, சபையானது பூமியில் தேவனுடைய நித்திய இராஜ்யமாக உள்ளது. இது விரைவில் கடந்தோடி விடுவதாகவோ அல்லது தற்காலிகமானதாகவோ இருப்பதில்லை; இது நிலையானதாகவும், அசைக்கப்பட முடியாததாகவும் மற்றும் என்றென்றைக்கும் அழிவற்ற தாகவும் உள்ளது.

பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார் என்று தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்தார் (தானி. 2:44). மரியாள் மேசியாவின் பூமிக்குரிய தாயாவாள் என்று காபிரியேல் தூதன் அவளுக்கு வெளிப்படுத்திய பொழுது, மேசியா ஆளுகை செய்யக் கூடிய இராஜ்யத்தின் நித்திய தன்மையைப் பற்றி அவர் குறிப்பிட்டார்: "அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக். 1:32, 33). இயேசு தம்முடைய சபையை நிலைநாட்டும் தமது நோக்கத்தை அறிவித்த பொழுது, பாதாளத்தின் வாசல்கள் அதனை மேற்கொள்ளாது என்று அவர் வாக்குத்தத்தம் செய்தார் (மத். 16:18). தேவனுடைய இராஜ்யமானது எபி. 12:28ல் அசைவில்லாத இராஜ்யம் என்று விவரிக்கப்படுகின்றது.

பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் நித்திய ஜீவனை உடையவர்களாய் இருக்கின்றனர். இந்த வாழ்க்கை என்பது நிகழ்கால அனுபவமாகவும் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இயேசுவை உடைய யாவரும் இப்பொழுது நித்திய ஜீவனை உடையவர்களாய் இருக்கின்றனர், ஏனெனில் அவரே நித்திய ஜீவனில் உருவாய் இருக்கின்றார் (1 யோவா. 1:2). இதன் விளைவாகவே யோவான், "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கின்றான்; மனுஷ கொலை பாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்பதை அறிவீர்கள்'' (1 யோவா. 3:15) என்று எழுதினார். தேவனுடைய ராஜ்யத்தின் நித்திய இயல்பானது இப்பொழுது நாம் கிறிஸ்தவர்களாயிருந்து அனுபவிக்கின்ற வாழ்விலும், நித்தியத்தில் பெற்றுக் கொள்ளும்படி நாம் எதிர்பார்க்கின்ற நித்திய ஜீவனிலும் விளக்கப்படுகின்றது.

நித்திய ஜீவனுக்குள்ளாக நமது பிரவேசித்தலானது ஒரு குழந்தை தனது தாயின் கர்ப்பத்திலிருந்து இந்த உலகில் பிரவேசித்தலைப் போன்றதாகும். குழந்தையானது தனது தாயின் கர்ப்பத்திலேயே வாழ்வை அனுபவிக்கின்றது. இருப்பினும் அந்தக் குழந்தைக்கு அங்கு கிடைத்த வாழ்வின் அனுபவமானது ஆறுதலும், தேவையெல்லாம் கொடுக்கப்பட்டதும், பாதுகாப்பும் உள்ளதாயிருந்தாலும் வரையறைக்குட்படுத்தப்பட்டதாகும். பிறப்பு நடக்கின்ற பொழுது, குழந்தையானது தொடர்ந்து வாழ்வை அனுபவிக்கின்றது, ஆனால் இது மாறுபட்ட மற்றும் முழு வடிவமான வாழ்வாக உள்ளது - இது ஐக்கியம், வளர்ச்சி மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் ஏறக்குறைய முடிவற்ற சாத்தியக் கூறுகள் உடையதாயிருக்கின்றது. இப்பொழுது இயேசு நமது இருதயங்களில் வாழ்கையில், வாழ்வில் அவர் ஒரு புதிய மற்றும் ஆச்சரியமான பண்பை - நித்திய ஜீவன் - அளிக்கின்றார்; ஆனால் நாம் வாழ்வின் மறுபக்கத்திற்குக் கடந்து செல்லுகையில், இந்த நித்திய ஜீவனானது தன்னிலேயே ஒரு மாறுபட்ட மற்றும் முழு வடிவை - பரலோகத்தின் ஐக்கியத்துடனும், விவரிக்க இயலாத மகிழ்ச்சியுடனும், மற்றும் நித்திய ஊழியத்துடனும் - விளக்கப்படுத்தும்.

கிறிஸ்தவர்கள், காலத்தாலோ அல்லது சரீரப் பிரகாரமான அளவீடுகளினாலோ பாதிக்கப்படாத ஒரு நித்திய ராஜ்யத்தின் பாகமாய் இருக்கின்றனர். நாம் தேவனுடைய வசனத்திற்கு உண்மை நிறைந்தவர்களாய் அவருடைய பாதுகாப்புக் கோளத்திற்குள் தங்கியிருக்கும் வரையிலும், அழிக்க முடியாத மற்றும் ஒருக்காலும் முடிந்து போகாத ராஜ்யத்தின் பாகமாய் இருக்கின்றோம்.

## முடிவுரை

கிறிஸ்தவரின் இருதயத்தில் தேவனுடைய ஆட்சி மற்றும் ஆளுகை செய்தல் என்பதை நமது குறிப்பின் அடிப்படை அமைப்பாகக் கொண்ட வகையில், புதிய ஏற்பாட்டின் சபையானது தேவனுடைய இராஜ்யமாய் இருக்கின்றது, இது ஆவிக்குரிய பண்பியல்புகளையும், நீதியையும் மற்றும் நித்தியத்துவத்தையும் கொண்டுள்ளது. இதன் குடிமக்கள் இந்த உலகத்தில் வாழ்கின்றனர், ஆனால் அவர்களின் இருதயங்களும் குடியுரிமையும் தேவனுடைய நித்திய ராஜ்யமாகிய இன்னொரு உலகத்தைச் சார்ந்ததாக

*உள்ளது (கொலோ. 3:1, 2; பிலி. 3:20).*

*யூதர்களின் ஒரு அதிகாரியான நிக்கொதேமு என்பவர் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி அதிகம் கற்பதற்காக ஓரிரவில் இயேசுவை நாடி வந்தார். இயேசு அவரிடத்தில் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்த லானது பிறப்பு என்ற வகையில் சிறப்பாய் விவரிக்கத் தக்கதாக பெரும் மாற்றங்களும் மாற்றுவதாகவும் உள்ள ஒரு மாற்றத்தினால் மட்டுமே பிரவேசிக்கக் கூடியதாயுள்ளது என்று கூறினார். அவர், ''ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' (யோவா. 3:5) என்று கூறினார். தேவனுடைய இராஜ்யத்தில் அதன் பூமிக்குரிய முறையான தொடக்க நாளில் பிரவேசம் நடந்து கொண்டிருக்கையில், பேதுரு, மக்கள் கூட்டத்தாருக்கு அவர்கள் இயேசுவின்மீது கொண்டிருந்த விசுவாசத்தின் வெளிச்சத்தில், மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படி புத்தி கூறினார் (அப். 2:38-41). யோவான் 3ல் இயேசு நிக்கொதேமுவுக்கு விவரித்த புதிய பிறப்பானது பேதுருவினால் அப். 2ல் செயல்படுத்தப்பட்டது. தேவனுடைய ராஜ்யத்தில் அல்லது சபையில் பிரவேசித்தல் அல்லது பிறத்தல் என்பது இயேசுவில் விசுவாசம் (யோவா. 3:16), மனந்திரும்புதல் அல்லது பாவத்திலிருந்து தேவனிடத்திற்குத் திரும்புதல் (அப். 17:30), இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஒப்புக் கொள்ளுதல் (ரோமர் 10:9, 10) மற்றும் பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் (அப். 2:38; 22:16) ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளது.*

*தேவனுடைய ராஜ்யத்திற்குள் குடியுரிமை என்பது வாழ்க்கைக்கு ஒரு ஆவிக்குரிய மைய நோக்கை, தேவனுடைய ஆளுகையைக் கொண்டு வருகிறது, இது வாழ்வின் ஒவ்வொரு கிளை மற்றும் முகப்பிலும் கதிர் வீசி, நிலைப்புத் தன்மையை, வழிகாட்டுதலை, புரிந்து கொள்ளுதலை மற்றும் முழுமைத் தன்மையை அளிக்கின்றது. இந்தப் பரிசுத்தமான குடியுரிமை யானது நமது வாழ்வில் நீதி, நன்மை மற்றும் சமாதானம் ஆகியவற்றையும் கொண்டு வருகின்றது. தற்காலிகமான இந்த உலகத்தில், தேவனுடைய இராஜ்யமானது நமது வாழ்வில் இன்றைக்கும் மற்றும் நமது நாளைய தினங்கள் யாவற்றுக்கும் நித்திய ஜீவனைப் பாய்ச்சுகின்றது.*

*நீங்கள் "சபை" என்ற தேவனுடைய நித்திய இராஜ்யத்தின் பிரஜையாய் இருக்கின்றீர்களா?*

---

குறிப்பு

[1]*"சபை" என்றால் என்ன? என்ற புத்தகத்தின் பிற்சேர்க்கை 2ல் "இராஜ்யம்" மற்றும் "இராஜ்யங்கள்" என்ற வார்த்தைகளுக்கான புதிய ஏற்பாட்டுக் குறிப்புரைகள் யாவும் அடங்கியுள்ளன. புதிய ஏற்பாடானது இந்த வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்துகின்றது என்பதைப் புரிந்து கொள்வதில் இந்தக் குறிப்புகள் உதவியாய் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தை 152 முறைகளும், "இராஜ்யங்கள்" என்ற வார்த்தை 3 முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.* Eddie Cloer *அவர்கள் எழுதிய ''சபை'' என்றால் என்ன? என்ற நூலில் காணவும்* (Searcy, Ark.: Resource Publications, 1993), 187-213.

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. சபை பெற்றுள்ள வேறுபட்ட பண்பினங்கள் பலவற்றை அட்டவணைப்படுத்தவும். ஒவ்வொரு பண்பினத்தைப் பற்றிய சுருக்கமான விவரிப்பைத் தரவும்?
2. சபையானது ஒரு இராஜ்யம் என்ற வகையில் கண்ணோக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்ற வேத வசனங்கள் யாவை?
3. புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தை எந்தெந்த மாறுபட்ட சந்தர்ப்பப் பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அட்டவணைப்படுத்தவும்.
4. சபையைப் பற்றி இராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பானது வேண்டிக் கேட்கின்ற முடிவுகள் என்ன? முடிவுகளை அட்டவணைப்படுத்தி அவைகளை விவரிக்கவும்.
5. நாம் ஆவிக்குரிய இராஜ்யத்தின் பாகமாய் இருந்தால், மதிப்பீட்டிற்கான ஒரு புதிய அமைப்பானது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு அமைப்பைப்பற்றிக் கலந்துரையாடவும்.
6. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நீதியின் இரு வகைகள் யாவை? ஒவ்வொரு வகையையும் விவரிக்கவும்.
7. தேவன் நிலைநாட்ட இருந்த இராஜ்யத்தின் நித்திய இயல்பை தானி. 2:44 விளக்கப்படுத்துகின்றதா?
8. தேவனுடைய இராஜ்யமானது இப்பொழுது ஒரு அனுபவமாகவும் எதிர்காலத்திற்கான ஒரு எதிர்பார்ப்பாகவும் இருப்பது எப்படி என்று கலந்துரையாடவும்.
9. நித்திய ஜீவன் என்பது இப்பொழுது எவ்விதம் விளக்கப்படுத்தப் படுகின்றது என்பதையும், நித்தியத்தில் அது எவ்விதம் விளக்கப் படுத்தப்படும் என்பது பற்றியும் கலந்துரையாடவும்.
10. பரலோகத்திலுள்ள நமது குடியுரிமையானது இன்று நம் வாழ்வில் கொண்டுள்ள மறைவான கருத்துக்கள் யாவை?
11. தேவனுடைய இராஜ்யத்தினுள் பிரவேசிப்பது எப்படி?
12. யோவான் 3:3, 5ஐ அப். 2:38 உடன் ஒப்பிடவும்.